**தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரக இணை இயக்குநரின் (பணியாளர்தொகுதி)**
**செயல்முறைகள், சென்னை-600 006**
**ந. க. எண். 57012 / அ4 / இ1 / 2020, நாள். 12 .12.2022.**

*****

பொருள் : தமிழ்நாடு அமைச்சுப்பணி – கீழ்நிலைப் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராகப் பணிமாறுதல் பெற்ற இளநிலை உதவியாளர்கள் – 53 வயதினைக் கடந்துவிட்டமையால் – பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்களிக்கக் கோரியது – கூடுதல் விவரங்கள் அனுப்பக் கோருதல் – சார்பு.

பார்வை : 1. தமிழ்நாடு பள்ளிக் கல்வி ஆணையரின் கடிதம் ந.க. எண். 57012/அ4/இ1/2020, நாள். 11.05.2022.
2. அரசுக் கடித எண். 3350/ப.க.4(2)/2021, பள்ளிக் கல்வித்துறை, நாள். 17.11.2022.

*****

பார்வை (2)ல் காணும் அரசுக் கடிதத்தின் நகல் அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் அனுப்பப்படுகிறது.

பள்ளிக் கல்வி இயக்ககத்தின் கீழ் ஆய்வக உதவியாளர் பதவியிலிருந்து பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளராகப் பணிபுரிந்து வயது முதிர்வின் காரணமாக ஓய்வு பெற்ற பணியாளர்கள் 53 வயதினைக் கடந்துவிட்டதால் பவானிசாகர் அடிப்படைப் பயிற்சி பெறுவதிலிருந்து விலக்களித்து ஆணை வழங்கக் கோரிய கருத்துருக்கள் பார்வை (1)ல் காணும் கடிதம் வாயிலாக அரசுக்கு அனுப்பப்பட்டது.

மேற்படி கருத்துருக்களை அரசு பரிசீலித்து கீழ்க்காணும் விவரங்களை அனுப்பி வைக்குமாறு பார்வை (2)ல் காணும் அரசுக் கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

அ). 26.02.2011க்குப் பிறகு ஆய்வக உதவியாளர் பதவியிலிருந்து இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டு ஓய்வு பெற்றவர்கள் விவரம்.

ஆ). 26.02.2011க்குப் பிறகு ஆய்வக உதவியாளர் பதவியிலிருந்து விதிகளுக்கு முரணாகப் பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளராக நியமனம் செய்யப்பட்டவர்களை மீண்டும் ஆய்வக உதவியாளராகப் பணியிறக்கம் செய்யப்பட்ட (நபர்கள் பட்டியலுடன்) விவரம்.

எனவே, மேற்காணும் அரசுக் கடிதத்தில் கோரியுள்ள விவரங்களை காலதாமதம் ஏதுமின்றி 16.12.2022ற்குள் cosea4sec@gmail.com எனும் மின்னஞ்சல் முகவரிக்கு உடன் அனுப்பி வைக்குமாறு அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேற்காண் விவரங்களை அரசுக்கு அனுப்ப வேண்டியுள்ளதால் இதில், தனிக்கவனம் செலுத்தி துரித நடவடிக்கை மேற்கொண்டு உடன் அனுப்பி வைக்குமாறு தெரிவிக்கலாகிறது.

இணைப்பு: 1.அரசு கடித நகல்-1.
2.படிவம்

**இணை இயக்குநர் (பணியாளர்தொகுதி).**

பெறுநர்
அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள்.

13/12/2022

**ஆய்வக உதவியாளர் பதவியிலிருந்து பணிமாறுதல் மூலம் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் பெற்று ஓய்வு பெற்றவர்கள் மற்றும் 26.02.2011க்குப் பிறகு இளநிலை உதவியாளராகப் பணிமாறுதல் பெற்று மீளப் பணியிறக்கம் செய்யப்பட்ட பணியாளர்கள் விவரம்**

| வ. எண் | மாவட்டம் | பணியாளரின் பெயர் மற்றும் பணிபுரியும் பள்ளி / அலுவலகம் (திரு. / திருமதி / செல்வி) | பிறந்த நாள் | ஆய்வக உதவியாளர் பதவியிலிருந்து பணிமாறுதல் / பதவி உயர்வு மூலம் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்த நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் பணிவரன்முறை நாள் | இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் முடித்திருப்பின் முடிக்கப்பட்ட நாள் மற்றும் அரசாணை எண் மற்றும் நாள் | ஆய்வக உதவியாளர் பதவியிலிருந்து பணிமாறுதல் / பதவி உயர்வு மூலம் இளநிலை உதவியாளராகப் பணியில் சேர்ந்து ஓய்வு பெற்றவர்கள் விவரம் | இளநிலை உதவியாளராகப் பணிமாறுதல் பெற்று மீள ஆய்வக உதவியாளராகப் பணியிறக்கம் செய்யப்பட்ட பணியாளர்கள் விவரம் | குறிப்புரை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | |

முதன்மைக் கல்வி அலுவலர்.